# தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

## C.S.I. TAMIL PARISH AL AIN, UAE




உனக்கு உண்டான எல்லா வாரத்திலும் உன் கைகளுடைய எல்லாக் கிரியையிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்தபடியினால், கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஏழு நாளளவும் பண்டிகையை ஆசாரித்துச் சந்தோஷமாயிருப்பாயாக.

-உபாகமம்:16:15

*For seven days you shall keep the feast to the Lord your God at the place that the Lord will choose, because the Lord your God will bless you in all your produce and in all the work of your hands, so that you will be altogether joyful.*

*-Deuteronomy:16:15*

OCTOBER '2022

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

## WELCOME

# HARVEST FESTIVAL

SATURDAY 6:00PM TO 10.30 PM

29 OCTOBER 2022

*You're Invited*

Thanksgiving

AUCTION

FOOD SALE



# FROM THE PASTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**"என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக"**

**-சங்கீதம்:19:14**

**May these words of my mouth and this meditation of my heart be pleasing in your sight LORD, my Rock and my Redeemer.**

**- Psalm: 19:14**

- ஆண்டவர் நாம் அறியாத குற்றங்களை மன்னித்து நமக்கு வாழ்வளிப்பவர்
- ஆண்டவர் நமக்கு கன்மலையும்,மீட்பருமாய் இருந்து பாதகாகிறவர்

இன்றைக்கு நம்முடைய விசுவாச வாழ்வில் அவரைப் பற்றிக் கொண்டு ஆண்டவருக்குள் நிலைத்து இருக்க அழைக்கபடுகிறோம்

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்றனர் நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து

துதிக்கின்றேன். தொடர்ந்து இந்த காலக்கட்டத்தில் இந்த தேசத்தில் நம்மை பாதுகாத்து வழி நடத்தி வருகின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். தொடர்ந்து அநேகர் இந்த காலகட்டத்தில் வேலைவாய்ப்புகள் இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

## CHAMP FOR CHRIST -2022

நமது திருச்சபையின் வாயிலாக கடந்த (செப்டம்பர்) மாதம் 11— 2022—ஆம் தேதி CHILDREN'S BIBLE SCHOOL (CBS)— பிள்ளைகளுக்கு CHAMP FOR CHRIST—2022 என்ற நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து இருந்தோம்

இந்த நிகழ்வில் நமது பிள்ளைகள்(குழந்தைகள்) மிகவும் உற்சாகமாக கலந்து கொண்டு தங்கள் திறமைகளை, ஆண்டவர் அளித்த தாலந்துகளை வொளிப்படுதினார்கள் அவர்களை வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம். தங்கள் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தி, உற்சாகமாக பங்குபெற செய்த பெற்றோர்கள் அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.இந்த நிகழ்ச்சியை நமக்கு நடுவர்களாக இருந்து நடத்தி கொடுத்த MR.BOSCO, MR.JERNUS, MR.PRINCELY ஆகியோருக்கு திருச்சபையின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இதை பொறுப்பெடுத்து நடத்திய CBS — ஊழியத்தின் பொறுப்பாளர்கள் MRS.AUGUSTA LAWRENCE, MR.RAVINDRA MR.SANTOSH & CBS TEACHER'S அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் எல்லா ஒழுங்குகளை நமக்கு செய்து கொடுத்த நமது திருச்சபையின் பொருளாளர் MR.MELBIN PAUL அவர்களுக்கும் அவர்களுடன் இணைந்து உதவிசெய்யத திருச்சபையின் பொறுப்பாளர்களுக்கும் திருச்சபையார் அனைவருக்கும் பாராட்டுக்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

## சேர்ப்பின் பண்டிகை - HARVEST FESTIVAL -2022

வருகின்ற அக்டோபர் மாதம் 29,—2022—ஆம் தேதி சனிக்கிழமை மாலை:6.00 மணி முதல் 10.30மணி வரை நமது திருச்சபையின் வருடாந்திர சேர்ப்பின் பண்டிகை (HARVEST FESTIVAL) ECC வளாகத்தில் நடைபெற உள்ளது இதற்காக திருச்சபை குடும்பத்தார் அனைவரும் ஜெபத்துடன் ஆயத்தப்படுமாறும், ஒவ்வொரு

குடும்பத்தினரும் தங்களின் பங்களிப்பினை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இதைக் குறித்து மேலும் விவரங்களை அறிந்து கொள்ள சேர்பின் பண்டிகை பொறுப்பாளர்கள் திரு.நெல்சன் சோபிதராஜ் மற்றும் திரு.ஹெவன் ஹெபா ஆகியோரைத் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் ஒவ்வொரு வாரமும் (WEEKLY FOOD) உணவு மற்றும் தின்பண்டங்கள் விற்பனை நடைபெறும் திருச்சபை குடும்பத்தார் அனைவரும் தங்களது பங்களிப்பை அளித்து திருச்சபை வளர்ச்சி பணிகளிலும் தங்களை இணைத்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இந்த பொறுப்பினை ஏற்று செய்ய இருக்கின்ற திருமதி.ஷெர்லி மெல்பின் மற்றும் திருமதி.ஜாக்லின் மில்கா ஹெவன் ஆகியோரை தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மேலும் சேர்பின் பண்டிகையில் ஒரு நாள் ஊதிய கணிக்க கவர் படைக்கும் மாறும், ஒவ்வொரு குடும்பத்தினரும் உங்களுடைய பங்களிப்பாக ஏலப்பொருட்களை வைக்கவும் ஏலப்பொருட்களை எடுத்தும் திருச்சபையின் வளர்ச்சி பணியில் உங்களை இணைத்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.அத்துடன் இந்த உன்னதமான திருப்பணியில் அனைவரும் ஜெபத்துடன் இனைந்து செயல்பட அழைக்கப்படுகிறோம்.

தொடர்ந்து இந்த காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக,பாதுகாப்பிற்காக,வேலைவாய்ப்புகளுக்காக,பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக, அவர்களின் உயர் கல்விக்காக அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக,திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்



Rev.S.P.Baskar

# திருவிழாக்கள் வழியாகக் கடவுளுக்கு நன்றி படைத்தல்

**உனக்கு உண்டான எல்லா வாரத்திலும் உன் கைகளுடைய எல்லாக் கிரியையிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்தபடியினால், கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஏழு நாளளவும் பண்டிகையை ஆசாரித்துச் சந்தோஷமாயிருப்பாயாக.**

**-உபாகமம்:16:15**

**For seven days you shall keep the feast to the LORD your God at the place that the LORD will choose, because the LORD your God will bless you in all your produce and in all the work of your hands, so that you will be altogether joyful**

**Deuteronomy:16:15**

## முன்னுரை

இஸ்ரயேலரின் ஆண்டு விழாக்கள் எபிரேயர்களின் சமய வழிபாட்டில் அவர்கள் கொண்டாடிய பல ஆண்டு விழாக்கள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டாடுவதன் மூலம்

- திருவிழாக்களின் மூலம் மக்கள் கடவுளுக்கும் தங்களுக்கும் உள்ள உறவை நிலை நாட்டினார்கள்
- திருவிழாக்களின் மூலம் மக்கள் தங்களை புனிதப்படுத்திக் கொண்டார்கள்
- திருவிழாக்களின் காலங்களில் மக்கள் புனித பயணங்களை மேற்கொண்டார்கள்
- திருவிழாக்களின் மூலம் மக்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமையை வளப்படுத்திக் கொண்டார்கள்

யூத சமயத்தில் பல்வேறு திருவிழாக்கள் இருப்பினும் உபா:16:1-17 இல் உள்ள மூன்று விழாக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

அவை...

- பஸ்காப் பெருவிழா
- அறுவடை பெருவிழா
- கூடாரப் பெருவிழா

இந்த விழாக்கள் இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் புனித விழாக்களாக கொண்டாடப்பட்டது. இது ஆண்டவர் அளித்த வாழ்விற்கு நன்றி உள்ளத்தோடு நன்றி படைக்கும் விழாக்களாக இது அமைந்திருந்தது.

## 1. பாஸ்காப் பெருவிழா (உபா:16:1–8)

யூதர்களின் முக்கிய பண்டிகைகளில் பாஸ்கா பண்டிகை ஒன்றாகும். இயேசுவின் காலத்தில் இத்திருவிழாவே யூதர்களின் முதன்மையான விழாவாகும். திருமறை இந்த பாஸ்கா திருவிழாவை குறித்து இரண்டு மரபுகள் அளிக்கின்றன.

- ஆண்டின் முதல் மாதமாகிய நீசான் மாதத்தில் பௌர்ணமி அன்று பாஸ்கா விழாவையும் அதற்கடுத்து வரும் புளிப்பில்லா அப்பத் திருவிழாவையும் கொண்டாட வேண்டும் என்பதாகும்.(லேவி:23:5-8, எண்:28:16-26 யாத்:12:1-20)
- உபா:16:1-8-இன் படி இந்த இரண்டு விழாக்களும் இணைக்கப்பட்டு கொண்டாட வேண்டும் என்பதற்கான விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளது

பாஸ்கா என்றால் "கடந்து செல்லல்" என்று பொருள் ஆகும். இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் கடந்து சென்ற நிலைகளை கடவுள் செய்த நன்மைகளை திரும்பிப் பார்த்து கடவுளுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை தான் பாஸ்கா என்பதாகும். இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் கொடிய அடிமை தனத்திலிருந்து கடவுள் (யாவே)மோசேயின் மூலம் விடுதலின் வாழ்வு கொடுக்கிறார். இந்த விடுதலையின் வாழ்வை பெற்றுக் கொண்ட இஸ்ரயேல் மக்கள் புதிய வாழ்வின் அடையாளமாக இந்த பண்டிகையை கொண்டாடினார்கள். இந்தப் பண்டிகையை ஏழு நாள் கொண்டாடுவார்கள் முதலாம் நாளும், ஏழாம் நாளும் இஸ்ரயேல் மக்கள் சபையாக கூடி வருவார்கள். இப்படி கூடி

வரும்போது புளிப்பை தங்கள் இல்லத்தில் இருந்து அகற்றி தேவையற்ற உணவு வகைகளை தீயிட்டு அழித்து விடுவார்கள் (யாத்:12:14-20) இது குடும்பமாக கொண்டாடும் பண்டிகையாகும்.

## 2. அறுவடைப் பெருவிழா (உபா:16:9–12)

இஸ்ரயேல் மக்கள் நல்ல நிலங்களை வைத்து விளைச்சலைக் கண்டவர்கள், ஆடுகள் மேய்த்துக் கொண்டு நல்ல வளமுள்ளவர்களாக இருந்தார்கள் இந்த நிலையில் இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக்கப்பட்டபோது இவர்களின் நிலங்களையும் ஆடு மாடுகளையும் ஆண்டவர் பாதுகாத்தார். மீண்டும் விடுதலைப் பெற்று வந்தவுடன் அவர்களின் நிலங்களைப் பெறும்போது அவற்றின் பலன்களைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்கள் அதன் மூலம் அவர்களின் விளைச்சல் பெருகியது இதற்காக நன்றி செலுத்தினார்கள் அதுவே அறுவடை பண்டிகையாகும். இந்த விழா ஏழு வாரங்கள் கொண்டாடப்படும் இதில் மக்கள் முதற்கனிகள் புதுத் தானியங்கள் இவைகளைக் கொண்டு வந்து ஆண்டவருக்கு படைத்து இந்த விழாவை சிறப்புடன் கொண்டாடினார்கள்.

## 3. கூடாரப் பெருவிழா (உபா:16:13–15)

இஸ்ரயேல் மக்கள் மிகச் சிறப்பான பண்டிகையாக இதை கொண்டாடுவார்கள். "சுக்கோத்" என்னும் எபிரேய சொல்லுக்கு கூடாரம், குடிசை, கொட்டகை என்று பொருள் கொள்ளலாம். இது முதல் முதலில் அறுவடை விழாவாக அழைக்கப்பட்டது (யாத்:23:16, 34:32) பிறகுதான் கூடார விழா என அழைக்கப்பட்டது (உபா:16:13-16) இது யாவேவின் விழா என்றும் அழைப்பார்கள் (லேவி:23:39, எண்:29:12) இந்த விழா தான் எபிரேயருடைய விழாக்களிலே மிகவும் புகழும் புனிதமும் வாய்ந்தது ஆகும். இந்த விழா உழவுத் தொழிலோடு தொடர்புடைய விழாவாகும். இந்த விழா எருசலேம் ஆலயத்திற்கு செல்லும் பயண விழாவாக விவரிக்கப்படுகிறது. இந்தப் பயணத்தின் போது மக்கள் கூடாரங்கள் அமைத்து தங்கி ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் வண்ணமாக ஆடி பாடி மகிழ்ச்சியுடன் கொண்டாடுவார்கள். அத்துடன் தங்கள் வீடுகள் மீதும் கூடாரங்கள் அமைத்து ஏழு நாட்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவார்கள். இதன் மூலம் இஸ்ரயேல் மக்கள் தங்களின் அடிமைத்தன

வாழ்வை நினைவுப்படுத்தி ஆண்டவர் தந்த விடுதலை வாழ்வுக்கு நன்றி செலுத்தும் பண்டிகையாகும்.

## நிறைவாக

பாஸ்கா பெருவிழா, அறுவடை பெருருவிழா, கூடாரப் பெருவிழா இம்மூன்று பண்டிகைகளும் ஒவ்வொரு யூதரும் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் கடைபிடிக்க வேண்டும். இதனை ஆண்டவரின் திருமுன் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும். ஆண்டவர் அளித்த விடுதலைக்காகவும் ஆண்டவருடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்காகவும், உறவிற்காகவும், வழி நடத்துதலுக்காகவும் இவ்விழா கொண்டாடப்பட்டது. இன்றைக்கு நாமும் ஆண்டவர் தந்த வாழ்விற்காகவும் உறவிற்காகவும் விடுதலைக்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்த இந்த பண்டிகையை கொண்டாட அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்..

Rev.S.P.Baskar



# வஸ்தி

எஸ்தர்



" ராஜ ஸ்திரீயாகிய வஸ்தியும் ராஜாவாகிய அகாஸ்வேருவின் அரமனையிலே ஸ்திரீகளுக்கு ஒரு விருந்து செய்தாள்"

—எஸ்தர்:1:9

**“QUEEN VASHTI ALSO GAVE A FEAST FOR THE WOMEN IN THE PALACE THAT BELONGED TO KING AHASUERUS”**

**- ESTHER:1:9**

வஸ்தியை குறித்து எஸ்தரின் புஸ்தகம் முதல் அதிகாரத்தில் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. இவள் #பாபிலோன் தேசத்தை ஆட்சி செய்த நேபுகாத் நேச்சார், பெல்சாஷார் வழியில் பிறந்த மகள். எனவே #வஸ்தி ராஜவம்சத்து பெண். இந்து தேசம் முதல் எத்தோப்பியா தேசம்வரையிலான 127 நாடுகளை ஆட்சி செய்த அகாஸ்வேரு ராஜாவின் பட்டத்து ராணி இவள் வஸ்தி என்றால் "அழகி" என்று அர்த்தம். அவளது பெயரை போலவே சவுந்தரியமும், அழகியுமாக இருந்தாள். இவளது கணவன் அகாஸ்வேரு ராஜா ஆட்சி காலம் கி.மு 485 முதல் கி.மு 464 வரை ஆகும். எஸ்தர் புஸ்தகத்தில் #கர்த்தர் #தேவன் #ஆண்டவர் என்ற எந்த வார்த்தையும் இல்லை. ஒரு பெரிய விருந்துடன் எஸ்தர் புஸ்தகம் ஆரம்பம் ஆகிறது.

பெர்சியா மன்னர்கள் அடிக்கடி விருந்து கொடுத்து மகிழ்ந்து ஒருவருக்கெருவர் ஐக்கியப்படுவது வழக்கம். பெர்சியா மன்னன் அகாஸ்வேரு தான் ஆட்சி செய்த மூன்றாம் வருஷம் பெர்சியா அரசர்களின் குளிர்கால அரண்மனையான சூசானில் தன்னுடைய பிரபுக்களுக்கும், மந்திரிகளுக்கும் , ஊழியகாரர்களுக்கும் 180 நாட்கள் (6 மாதம்) விருந்து பண்ணினான். இந்த விருந்து முடிந்த பின் 7 நாட்கள் இன்னும் சிறப்பான விருந்து பண்ணினான். இந்த விருந்து அரசனின் செல்வத்தை காட்டியது.பெர்சியர்கள் மது அதிகம் அருந்துபவர்கள்.இந்த விருந்தில் முதல்தரமான மது பரிமாறப்பட்டது. மன்னன் அகாஸ்வெரு விருந்து பண்ணிய அதே நாட்களில் பட்டத்து ராணி வஸ்தியும் விருந்து செய்தாள். இரண்டாம் விருந்தின் ஏழாம் நாளில் ராஜா மது

அருந்தி களைப்பாக இருக்கும் போது ஒரு விபரீத ஆசை ராஜாவுக்கு வந்தது. 127 நாடுகளின் மந்திரிகள், பிரபுக்கள், ஊழியகாரர்களுக்கும் தனது மனைவி வஸ்தியின் அழகையும், சவுந்தரியத்தையும் காட்ட வேண்டும் என்பது தான். அரசன் அதிகமாக மது அருந்தி வெறித்திருந்தான். அதில் இருந்த அமைச்சர்கள், பிரபுக்கள், ஊழியர்கள் அனைவரும் மது அருந்தி வெறித்திருந்தனர். இப்படிபட்ட சூழ்நிலையில் தனது ராணி ராஜ கிரீடம் அணிந்து அனைவர் முன்பும் வரவேண்டும் என்று தனது பிரதானிகள் ஏழு பேர் மூலமாக சொல்லி அனுப்பினான். பெண்களுக்கு நடக்கும் விருந்தில் வஸ்தி இருந்த போது இந்த செய்தி அவளுக்கு வந்தது. ஒருவேளை அவள் விருந்தில் மும்மரமாக இருந்திருக்கலாம். ராஜா சொன்ன கட்டளைக்கு வரமாடேன் என்று தைரியமாக சொன்னாள். வரமாடேன் என்று ஏன் கூறினாள் என்று பைபிள் கூறவில்லை. மதுவை குறித்து பைபிள் என்ன சொல்கிறது. திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும்: அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல.

நீதிமொழிகள் 20:1 — மதிகேடாய் நடக்கிற ஸ்திரீயை பற்றி பைபிள் என்ன கூறுகிறது. மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ, பன்றியின் மூக்கிலுள்ள பொன்மூக்குத்திக்குச் சமானம்.

நீதிமொழிகள் 11:22 — அகாஸ்வெரு ராஜாவும் வஸ்தியும் மெய்யான தேவனை அறியாதவர்கள் தான். ஆனால் வஸ்தி அடக்கவும் ஞானத்தோடும் இருந்ததால் தான் குடித்து வெறித்திருக்கும் பிரபுக்களும், அமைச்சர்களும் இருக்கும் இடத்தில் ராஜ கிரீடம் அணிந்து நடனமாட வரமாடேன் என்று தைரியமாக கூறினாள். தனக்கும் தன் கணவருக்கும் மட்டுமே உரிமையுள்ள தன் அழகை மற்றவர்களுக்கு காட்டி கவர்ச்சிக்க விரும்பாதவர்களாக இருந்திருக்கலாம்.

### நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ மானத்தைக் காப்பாள்:

நீதிமொழிகள் 11:16 வேதம் கூறுகிறது. தன் கற்ப்பை இழக்க விரும்பாதவளாகவும் இருந்திருக்கலாம். எல்லோரும் தன்னை ஒரு வியாபார பொருளாக பார்க்க விரும்பாதவளாக இருந்திருக்கலாம். அதனால் தான் வரமாடேன் என்று கூறியிருப்பாள். தான் கூறி அனுப்பியும் வரமாடேன் என்று வஸ்தி பதில் சொன்னதை அறிந்த மன்னன் கோபம் அடைந்தான்.

### கோபத்தின் உச்சிக்கே சென்றான் மன்னன்

மன்னன் கோபத்தை அடக்கி வஸ்தியை மன்னித்திருக்கலாம். ஒரு வேளை உமது கட்டளையை உமது மனைவியே கேட்கவில்லையா என்று விருந்தில் இருந்த யாராவது கூறியிருக்கலாம். அது மன்னனின் கோபத்தை அதிகரிக்க செய்திருக்கலாம். மன்னன் வஸ்தியை தனியே அழைத்து வராததற்கான காரணத்தை கேட்டிருக்கலாம். தான் குடி போதையில் இட்ட கட்டளை தானே என்னிடமும் தவறு உள்ளது என்று அரசன் விட்டு கொடுத்திருக்கலாம்.

ஒரு பெண் என்னை அவமதித்தாள் என்று ஆதிரப்பட்டிருப்பான் போல.. வஸ்தியும் தன் கணவனை சந்தித்து பேசியிருக்கலாம். அல்லது காரணத்தை சொல்லி அனுப்பியிருக்கலாம். தான் வரமாட்டேன் என்று சொன்னால் பிரபுக்கள் முன் கணவர் அவமானப்படுவாரே என்றும்

அவள் நினைக்கவில்லை. ராணி என்ற அந்தஸ்து போகும் நேரத்திலும் கூட வஸ்தி ராஜாவிடம் மன்னிப்பு கேட்கவில்லை. வஸ்தி வரமாட்டேன் என்று கூறியதால் என்ன செய்யலாம் என்று அரசன் யோசித்திருக்கலாம். ஆனால் வஸ்திக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று நியாயப்பிரமாணத்தையும் , சட்ட நீதியையும் நன்கு அறிந்தவர்களிடம் ஆலோசனை கேட்கிறான். தன் சொந்த மனைவியின் காரியத்தை அரச காரியமாக்கிவிட்டான்.. பெர்சியா நாட்டின் பிரதானிகளில் ஒருவனான மெம்முகான் வஸ்தியின் செயலை குடும்பத்தில் நடக்கும் ஒன்றாக கருதவில்லை. மது அருந்திய இடத்துக்கு வஸ்தி வராததை தேசிய பிரச்சனை ஆக்கினான். அரசி வஸ்தியே புருஷனுக்கு கீழ்படியவில்லை என்றால் நாட்டில் உள்ள மற்ற பெண்கள் புருஷர்களுக்கு கீழ்படியமாட்டார்கள் என்று கூறினான்.

எல்லா பெண்களும் புருஷனுக்கு கீழ்படிய வேண்டும் மென்றால் வஸ்தியின் அரசி அந்தஸ்தை எடுத்து அவளை துரத்திவிட்டு வேறு ஒரு பெண்ணை அரசி ஆக்க வேண்டும் என்று கூறினான். இது பெர்சியா நாட்டு சட்டத்திலும் எழுத வேண்டும் என்று ஆலோசனை கொடுத்தான். இதை குடி போதையில் கேட்ட மன்னன் குடி போதை இறங்கும் முன்னே 127 நாடுகளுக்கும் அந்தந்த ஜாதியார் பேசும் பாஷையில் எழுதி அனுப்பப்பட்டு சட்டமாக்கப்பட்டது.. குடி போதை தீர்ந்தபின் தான் செய்த தவறை பற்றி நினைத்திருப்பான். ஆனாலும் பயனில்லை. ஆனாலும் அவன் வருத்தப்படவில்லை..வஸ்தி செய்தது தவறு இல்லை. தனக்கும் தன் கணவனுக்கும் சொந்தமான அழகை அவள் காப்பாற்றினாள். வஸ்தியின் ராணி அந்தஸ்து எடுக்கப்பட்டது. வஸ்தியின் இடத்தில் எஸ்தர் ராணி ஆகிறார். ஆனாலும் தேவன் உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். சங்கீதம் 84:11 – வஸ்தியின் மகன் அர்த்தஷீட்டாவை தேவன் அகாஸ்தெரு ராஜாவுக்கு பின் அரியணையேற்றினார்.

இன்றைக்கு நாமும் இந்த வஸ்தியை போல பெண்கள் தங்கள் உரிமைக்காக குரல் கொடுக்கவும் தைரியம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். பெண்களை அடக்கி வாழ்வது மகிழ்ச்சியான இல்லற வாழ்கை அல்ல. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் புரிந்து விட்டு கொடுத்து வாழவேண்டும். ஒருவர் குற்றத்தை ஒருவர் மன்னித்து வாழ வேண்டும். அப்படி பட்ட குடும்பத்தை தான் தேவனும் ஆசீர்வதிப்பார்.
இப்படி பட்ட சிந்தனையுடன் வாழ ஆண்டவர் நமக்கு துணை செய்வாராக.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக...

ஆண்டவரின் அருட்பணியில் உங்கள் ஆயரம்மா.....

*Mrs . E . Nancy Baskar*

# LOVE ONE ANOTHER

சிறுவன் ஒருவன் கொடிய வியாதியினால் அவதிப்பட்டு வந்தான். வியாதியினிமித்தம் பள்ளிக்கு செல்ல இயலவில்லை. கடும் சிகிச்சை நிமித்தம் அவன் தலையில் உள்ள முடிகள் எல்லாம் கொட்டி விட்டன. பல மாதங்கள் மருந்து மாத்திரைகளுடன் வாழ்ந்து வந்தான். பல விதமான சிகிச்சைகளுக்கு பின்பு ஓரளவு உடல் தேறி வந்தான். மருத்துவர்களின் அனுமதி பெற்று பள்ளி படிப்பை தொடர முடிவு செய்தான். ஆனால் அவன் தலை முடி மீண்டும் வளர தாமதிப்பதால் கவலை அவன் உள்ளத்தை வாட்டியது. நண்பர்கள் கேலி செய்வார்கள் என கலங்கினான். பெற்றோர்களின் வற்புறுத்தலினால் மறுநாளிலிருந்து பள்ளிக்கு செல்வது என தீர்மானித்தான். இரவில் சரியாக தூக்கம் வரவில்லை. நண்பர்களின் கேலி கிண்டலை சிந்தித்தவனாய் படுக்கையில் அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தான்.

மறுநாள் காலையில் மிகுந்த தயக்கத்தோடு பள்ளிக்கு சென்றான். ஆனால் ஆச்சர்யம் அவனுக்கு காத்திருந்தது. தனது வகுப்பின் அனைத்து மாணவர்களும் தங்கள் தலையை மொட்டை அடித்துக் கொண்டு வந்திருந்தனர். தங்களது நண்பன் கொஞ்சமும் தனது குறையை உணர்ந்து வருந்தி விடக்கூடாது என அனைவரும் நினைத்து தங்கள் நண்பனுக்கு இணையாக தங்களை மாற்றிக் கொண்டனர். மாணவர்களின் இத்தகைய செயல் பாராட்டுக்குரியதே.

வேதம் சொல்லுகிறது: நீதிமொழிகள் 18:8 கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டு போல் இருக்கும், ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும்.
நீதிமொழிகள் 3:27 நன்மை செய்யும்படி உனக்கு திராணி இருக்கும்போது அதை செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே. நமது செயல்களும் வார்த்தைகளும் நம்மை படைத்த தேவனை பிரியப்படும் ஆமென்.

WOMEN'S Fellowship




**"ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்" (யோபு 9:10)**

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர்களே ஏசு கிறிஸ்துவின் நாமத்தில். ஸ்தோத்திரங்களை. சொல்லிக்கொள்வதில். மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்பொதுவாக இந்த மாதத்தின் வாக்கு தத்துவமாய் கர்த்தர் நம்மோடு பேச விரும்புகிற வசனம் " (யோபு 9:10).**

**நம்முடைய கர்த்தர் எவ்வளவு பெரியவர் என்பதை அறிந்து உணர்ந்துக்கொள்ளுகின்றோமோ அந்தளவுக்கு நம்முடைய வாழ்க்கையில் அவரை மேன்மைப்படுத்தவும், நம்மைத் தாழ்த்தவும் நமக்கு அது உதவியாக இருக்கும். அநேகருடைய வாழ்க்கையில் இந்த தேவன் எவ்வளவு மகத்துவமானவர் என்பதை வேத சத்தியத்தின்படி அறிந்து கொண்டு விளங்கிக்கொண்டு வாழாததினால், தங்களையும் தங்கள் காரியங்களையும் முக்கியப்படுத்தப் பிரயாசப்படுகிற உணர்வு அவர்களில் காணப்படுகிறது. இந்த இடத்தில் யோபு சொல்லுகிறார், "ஆராய்ந்து முடியாத பெரியக் காரியங்கள் என்று." மனிதனுடைய சிந்தைகளுக்கும் விளங்குதலுக்கும் அப்பாற்பட்டப் பெரியக் காரியங்களைச் செய்கிறவர் நம்முடைய தேவன். மேலும் அவர் எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் இந்த தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை அறிந்து கொள்ளும் பொழுது, அவனுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய சிந்தனைகளும் எண்ணங்களும் பெருகுகிறதாய் காணப்படும். அநேகருடைய வாழ்க்கையில் இந்த தேவன் எவ்வளவு பெரியவர் என்பதை அறியாமல் இருப்பது, அவர்கள் வேதத்தில் நாம் அவரைப் பற்றி அறிந்துகொள்வதில் எவ்வளவு குறைவுள்ளவர்கள் என்பதையே காட்டுகிறது. இந்த மகத்துவமான தேவனின் ஒவ்வொரு**


செயலையும் நாம் வேதத்தில் சிந்தித்துப் பார்க்கும்பொழுது நம்மால் விளங்கிக்கொள்ளக் கூடாத மிக உன்னதமான மகத்துவமான தேவன் இவர் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். இந்த தேவனை நாம் அறிந்து கொண்டு வாழும்பொழுது நம்முடைய வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

யோபு சொல்லுகிறார்

**"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்". (யோபு- 42:2)**

நாமும் விசுவாத்தில் உறுதியாய் இருப்போம் இயேசுவால் அனைத்தையும் செய்யமுடியும் அவரால் செய்யகூடாதகாரியம் ஒன்றும் இல்லை அவர் அனைத்தையும் செய்ய வல்லவர் அவர் செய்ய நினைத்தது தடைபடாது .அனுதினம் நாம் ஜெபித்து. ஆண்டவர் நமக்கு. செய்யவேண்டிய. அனைத்து காரியங்களையும். செய்து முடிக்கும்படியாய். ஊக்கமாய் ஜெபிப்போம். கர்த்தர் உங்களோடு கூட இருப்பாராக. ஆமேன்.

MEN'S FELLOWSHIP





# வேதம் என் மனமகிழ்ச்சி

**“உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்” – சங் 119:92**

துக்கம் நம்முடைய வாழ்க்கையில் நம்பிக்கையின்மைக்கு வழிநடத்துகிறது. துக்கம் நமக்குள் சோர்வு, தளர்வை உண்டுப்பண்ணுகிறது. வாழ்க்கையில் மனிதனுக்கு சஞ்சலமும், வேதனையும் துக்கமும் பங்காய் நியமிக்கப்பட்டிருகிறது. இந்த சங்கீதக்காரனும் இவ்விதமான துக்கத்தில் கடந்து போயிருக்கிறான். இன்றைக்கு அநேகர் துக்கம் என்றால் அதிலேயே முழுகிவிடுகிறார்கள். முற்றிலும் நம்பிக்கையின்மைக்குள் போய் விடுகிறார்கள். அதுவல்ல கிறிஸ்தவ வாழ்க்கையென்பது. துக்கம் வரலாம் சோதனைகள் வரலாம். ஆனால் அதன் மத்தியில் தேவனுடைய துணையோடு கடந்து செல்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. என்றும் துக்கமில்லாத ஒரு தேசத்தை நோக்கிப் போகிற பிரயாணத்தில் இருப்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. ‘இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை’. (வெளி 21 : 4 )

ஆனால், இவ்விதமான வேளையில் சங்கீதக்காரன் நல்ல முன்மாதிரியை வைத்திருக்கிறான் பாருங்கள். வேதத்தின் பக்கமாகத் திரும்பினான். வேதம் தேவனுடைய வார்த்தை என்பதை மறவாதே. இது ஒரு கிறிஸ்தவனுக்கு இந்த வனாந்திரப் பாதையில் வழிக்காட்டியாக , தீபமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. துக்கத்தின் பாதை இருண்ட பாதை அதில் நடக்க உனக்கு வெளிச்சம் தேவை அதை நீ தேவனுடைய வார்த்தையின் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். அதற்காகவே தேவன் நமக்கு வேதத்தைக் கொடுத்திருக்கிறார்.

ஒரு கிறிஸ்தவனுக்குத் தேவையான அனைத்தையும் தேவன் தம்முடைய வார்த்தையில் கொடுத்திருக்கிறார். தேவ ஆவியானவர் உன்னுடைய சூழ்நிலைக்கு ஏற்றவண்ணமாக தமது வார்த்தையிலிருந்து உனக்குக் கொடுக்கிறார். சங்கீதக்காரன் தன்னுடைய துக்கத்திலே வேதம் மனமகிழ்ச்சியாயிருக்கிறது என்று சொல்லுகிறார் அன்பானவர்களே! துக்கத்தில் அமிழ்ந்துபோகாமல் அதன் மத்தியில் மனமகிழ்ச்சியாய் கடந்துபோக சங்கீதக்காரனுக்கு வேதம் உதவினால் , உனக்கும் வேதம் அவ்விதமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

YOUTH FELLOWSHIP




# WILLIAM WARD

(20 OCT 1969 - 7 MAR 1823)

வில்லியம் வார்ட் (WILLIAM WARD) அவர்கள் 1769 ம் ஆண்டு இங்கிலாந்து (ENGLAND) டெர்பி (DERBY) நகரத்தில் தச்சு வேலையை தன் தொழிலாக செய்து வந்த ஜாண் வார்ட் (JOHN WARD)என்பவருக்கு மகனாகப் பிறந்தார். குழந்தையாய் இருக்கும் போதே தந்தையை இழந்து அவரது தாயாரின் அரவணைப்பில் வளர்ந்து வந்தார்.



வார்ட் அவர்கள்பள்ளியில் படிக்கும் நாட்களிலேயே பகுதி நேர பணி புரிந்து தன் தாயாருக்கு உதவியாக இருந்து வந்தார். பின்னர் பள்ளிப் படிப்|பை முடித்து டெர்பிஎனும் பெயர் கொண்ட அச்சகத்தில் (DERBY PRINTERS) பயிற்சியாளராக தன்னை இணைத்துக் கொண்டார். இரண்டு வருடம் அங்கு பணிபுரிந்து பின்னர் அங்கிருந்து அவரது முதல் பயிற்சியாளரின் உறவினரான ஜாஷ்வா என்பவரின் அச்சகத்தில் இணைந்து அச்சுப்பணி தொடர்பான பல துறைகளிலும் தேர்ச்சி பெற்றார். பின்னர் 1794 – 95 ல்அங்கிருந்து புறப்பட்டு ஹல் (HULL) என்ற பகுதிக்கு பெயர்ந்து சொந்தமாக ஒரு அச்சகத்தை ஆரம்பித்தார்.

## சமய ஊழிய பின்னணி:

வார்ட் அவர்கள் ஆரம்ப நாட்களில் பாப்டிஸ்ட் (BAPTIST) திருச்சபையின் உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டார். தன்னுடைய அச்சுப்பணியின் மத்தியிலும் ஹல் பகுதியிலுள்ள கிராமப் பகுதிகளில் சுவிசேஷப் பணி

செய்வதை ஒரு முக்கியப் பணியாக தன் வாழ்வில் கடைபிடித்து வந்தார். அதோடு கூட வேதத்தை இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள வாஞ்சித்த அவர் யார்க்ஷேயர் இறையியல் கல்லூரியில் (YORKSHIRE THEOLOGICAL ACADEMY) இணைந்து இறையியல் பட்டமும் பெற்றார்.

**சுவிஷேசப் பணி:**

1793ஆம் ஆண்டு வார்ட் அவர்களின் ஊழிய வாஞ்சை யையும் அவரது அச்சுத் துறை சம்மந்தமான திறமைகளையும் அறிந்த வில்லியம் கேரி (WILLIAM CAREY) அவர்கள் தன்னுடைய இந்திய ஊழியப் பணிக்கு வார்ட் மிகவும் உதவியாக இருப்பார் என உணர்ந்து தனது ஊழியத்தில் இணைந்து செயல் பட அவருக்கு அழைப்பு விடுத்ததார். இதனை அறிந்த பாப்டிஸ்ட் ஊழியக் குழுவினர் (BAPTIST MISSION COMMITTEE) 1799 ம் ஆண்டு மே மாதம் வார்ட் அவர்களையும் அவரோடு கூட ஜாஷ்வா மார்ஷ்மான் (JOSHUA MARSHMAN) அவர்களையும் இந்தியாவிற்கு அனுப்பி வைத்தனர். இங்கிலாந்திலிருந்து இந்தியாவின் கல்கத்தா (CULCUTTA) நகரத்திற்கு புறப்பட்டு வந்த அவர்கள் அன்றய இந்திய அரசு பிறப்பித்த ஆணையின் நிமித்தமாக கல்கத்தாவில் நுழைய முடியாத சூழ்நிலை ஏற்பட அங்கிருந்து செராம்பூர் (SERAMPORE) சென்று சுவிஷேசகர் வில்லியம் கேரி அவர்களோடு இணைந்து தனது ஊழியத்தை ஆரம்பித்தார்.

ARTICLE BY

தொடரும்.........

M.NESAMONY & FAMILY



# Prophecies that confirm the Bible

## •The Fall of Tyre

In 597 B.C, the Prophet Ezekiel made a proclamation that many nations will come up against the Mighty Tyre. The Babylonian king Nebuchadnezzar will destroy the villages and will built siege mounds against the city. It's stones, timber and soil will be thrown into the sea. Secular history proves that Nebuchadnezzar did come against tyre and built siege mounds. But the inhabitants of tyre fled to a nearby Island which was difficult to attack. In 330 B.C, Alexander the Great came up against tyre and again the inhabitants fled to the Island as Alexander wasn't happy with just a mainland victory, he scraped clean the ground which was filled with rocks, timber and soil and dumped them into the sea and made the Alexander causeway.




## •The fall of Babylon

Babylon was one of the richest countries in the world. Between the years 740-680 B.C. It had walls which were 75 feet thick and 300 feet high and it was surrounded by the Euphrates Riverin some places 65 feet and in others 250 feet wide. The river went under the great city too. Yet, the prophets in the Bible prophesied saying God will a cause several nations to come up against Babylon (Jeremiah 50:9). God will dry up her waters and cause a drought because the land is filled with idols (Jeremiah50:38). Secular history validates this prophecy. King Cyrus made the river which went under the city into a basin and marched into the city under the walls and the Babylonians were drunk and feasting when that happened(Jeremiah51:39)

**From this we can conclude that the Bible is 100% true and accurate in its prophecies which cannot be done by any person or book without divine help.**






Joshuva Koshy

# Journey of the books

I went to Genesis hotel through Exodus road. On the way, I saw Leviticus recording the Numbers of people at Deuteronomy, while Joshua was waiting at the Beautiful gate for Judges to see Ruth calling loudly "Samuel, Samuel. At a stage, the first and second Kings of Chronicles 1 & 2, were coming to visit Ezra, Nehemiah and Esther for the misfortune of Job their brother. They started singing Psalms and teaching children Proverbs concerning Ecclesiastes and Songs of Solomon. This coincided with the period that Isaiah was engaged in Jeremiah's Lamentations together with Ezekiel and Daniel their friends. By that time, Amos and Obadiah were not around. Three days later, Hosea, Joel and Jonah travelled in the same ship with Micah and Nahum to Jerusalem. Habakkuk then visited Zephaniah who introduced him to Haggai a friend of Zechariah whose cousin is Malachi. Immediately after the tradition, Mathew, Mark, Luke and John got involved in Acts of the Romans who were behaving like the 1st Corinthians group because the 2nd Corinthians group were always at loggerheads with the Galatians. At that time too, they realized that the Ephesians and Philippians were close to the Colossians, and a suggestion for the first Thessalonians visit was made, and that on their second Thessalonians visit, they should first of all see the first and second of the Timothy brothers who had gone to the house of Titus to teach Philemon his younger brother how to read and write in Hebrew. On hearing this, James asked Peter twice to explain to him how the three Johns have disclosed to Jude the Revelations of this journey.



ROSHAN




CBS - TEENS

**TEACHER : MR. STANLY**

# SEPTEMBER Congratulations

## KIDS COLOURING
Bernicia
Smyrna Syntche
Jania Preni
Johan Sanjo
Hazel Hartlyn
Reagan Shan
Kariss Angelo
Chris Gabiriel

## CODE WORD
Patricia
Jania Preni
Johan Sanjo
Hazel Hartlyn
Kariss Angelo
Sherin Shah
Jason Eric

## WORD SEARCH
Sherin Shah
Johan Sanjo
Roshan
Eric Aaron
Jason Eric

## CROSS WORD
Shelbino
Roshan
Johan Sanjo
Sherin Shah
Eric Aaron
Joshua

## BIBLE QUIZ
Shelbino
Roshan
Joshua

Well Done!

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month - Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# GENESIS: 11-20

## ஆதியாகமம்: 11—20

SEPTEMBER '22 - QUESTIONS






*1.அர்பக்சாத்தைப் சேம் எத்தனை வயதில் பெற்றார்?*

*2. ஆபிரகாம் ஆரானை விட்டு போகும்போது எத்தனை வயது?*

*3. ஆபிரகாம் எங்கு கர்த்தருக்கு பலிப்பிடத்தைக் கட்டினார்?*

*4. ஆபிரகாமிற்கு என் பொருளை எடுத்துக் கொள்ளும் என்று சொன்ன ராஜா யார்?*

*5. சூரியன் அஸ்தமித்த போது ஆபிரகாமுக்கு என்ன நடந்தது?*

*6. காதேசுக்கும் - பாரேத்துக்கும் நடுவே இருந்த துரவு பெயர் என்ன?*

*7. ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணப்பட்ட போது எத்தனை வயது?*

*8. எந்த ஸ்தலத்தை ஐம்பது நீதிமான் இருந்தால் இரட்சிப்பேன் என்று ஆண்டவர் சொன்னார்?*

*9. லோத்து எங்கு வரும்போது சூரியன் உதித்தது?*

*10. ஆபிரகாமுக்கு தன் மனைவியாகிய சாராளை திருப்பிக் கொடுத்தது யார்?*

### செப்டம்பர் - 2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. ஆதி: 1:19 | 2. ஆதி: 2:11 | 3. ஆதி: 3:9 | 4. ஆதி: 4:18 | 5. ஆதி: 5:23

6. ஆதி: 6:14 | 7. ஆதி: 7:12 | 8. ஆதி: 8:14 | 9. ஆதி: 9:18 | 10. ஆதி: 10:24

**திருமதி. ஜோனிஷ் ஹெர்ஷெல், திருமதி.ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஹெலன் கம்பீரம் திருமதி.ஜமுணா ராணி, திருமதி. பமீலா டேனியல், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா**


ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348

# KIDS COLOURING



PRIMARY

# 10 Commandments

---

1. I am the ___________ your God. You will have no other gods before me.
2. You shall make no ___________.
3. You shall not take the _________ your God in vain.
4. Remember the ___________ and keep it holy.
5. Honor your ____________ and mother.
6. Do not _____________.
7. Do not commit _______________.
8. You shall not ______________ from people.
9. Do not give ____________ testimony against your neighbor.
10. Do not _____________ other people's things.

| | | | | |
|---|---|---|---|---|
| **Sabbath** | **Name** | **Steal** | **False** | **Desire** |
| **Father** | **Idols** | **Kill** | **Adultery** | **Lord** |

# The Ten Commandments

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | U | S | G | S | E | C | O | M | M | I | T | E | V |
| M | O | T | H | E | R | F | A | T | H | E | R | H | N |
| E | M | L | S | H | E | A | V | E | N | B | L | A | M |
| I | I | L | L | A | H | S | H | O | N | O | R | D | Y |
| S | S | T | N | O | T | R | U | B | R | E | E | U | G |
| S | U | S | E | T | S | V | E | D | M | M | O | L | S |
| E | S | C | M | S | H | S | H | B | A | S | E | T | S |
| L | E | H | P | B | T | S | T | N | M | M | G | E | L |
| T | A | I | I | L | A | I | D | E | H | E | A | R | A |
| L | S | L | H | E | B | E | M | R | A | D | M | Y | V |
| I | E | D | S | S | B | P | S | O | G | L | I | E | E |
| U | S | R | R | S | A | E | O | U | N | O | L | A | R |
| G | E | E | O | E | S | C | I | R | O | Y | D | L | Y |
| V | R | N | W | D | N | N | E | I | G | H | B | O | R |

BLESSED
LORD
TESTIMONY
ADULTERY
NOT

REMEMBER
COMMIT
MISUSE
GOD
HEAVEN

FATHER
SHALL
STEAL
SLAVERY
HOUSE


CHILDREN
NEIGHBOR
NAME
GUILTLESS
HONOR

WORSHIP
IMAGE
MOTHER
SABBATH


SENIOR
& above

# The Ten Commandments

And God spoke all these words: "I am the LORD your God, who brought you out of Egypt, out of the land of slavery. "You shall have no other gods before me." Exodus 20:1-3




Based on Exodus 20:1-17 (NIV)




ACROSS

2. You shall not make for yourself an ______. (a false god)
5. You shall have no other _______ before me.
7. You shall ______ commit adultery.
8. You shall not _______. (kill)
9. You shall not give ______ testimony against your neighbor. (untrue)

DOWN

1. You shall not _______. (to want something that belongs to another)
3. ________ your father and your mother.
4. Remember the Sabbath day by keeping it ______.
6. You shall not ______. (to take what does not belong to you)
7. You shall not misuse the ______ of the LORD your God.

| | | | | |
|---|---|---|---|---|
| FALSE | IDOL | STEAL | HONOR | MURDER |
| NAME | COVET | HOLY | NOT | GODS |











# Champ For Christ

Fancy Dress

September 11, 2022












# Champ For Christ

Fancy Dress

September 11, 2022

# October

## HAPPY BIRTHDAY

| | |
|---|---|
| 01-OCT | MS. ANGILIN REMI PRINCY |
| 01-OCT | BABY. H.JOHANNA JANE D/0 C.HAVIN HEBA |
| 01-OCT | MRS. JOHN GERALD SHEEBA DERICK |
| 03-OCT | BABY. SMYRNA SYNTCHE D/O SANTHOSH KUMAR.M |
| 04-OCT | MR. PRAVEEN PAUL |
| 05-OCT | MR. IMMANUEL SUTHAN |
| 05-OCT | BABY. NIVINA CHANDRASEKAR D/0 CHANDRASEKAR.P |
| 07-OCT | MR. SHARVIN JOHN |
| 08-OCT | MS. AKILA |
| 08-OCT | BABY. JANET ZAHAINA D/O ARUNKUMAR |
| 09-OCT | BABY. D.P.MERCY D/O DEVA PRAKASH |
| 11-OCT | MR. PRABU DINESH KUMAR |
| 13-OCT | MRS. ANITHA GEROGE |
| 15-OCT | MR. JOVIN |
| 15-OCT | MASTR. GODSON DANIEL RAO S/O DANESH YOGENDRA RAO |
| 15-OCT | BABY. ERLINE BERNICE RAJ D/O SAMAN RAJ KUMAR |
| 17-JAN | MRS. SAHILA GRACE JUSTIN |
| 17-OCT | MS. AKSHAYA KANNAN |
| 18-OCT | MRS. HELEN HEMABAI |
| 20-OCT | MRS. PATRICIA SANTHI |
| 20-OCT | BABY. AIDEAN JOYPHONSE DERICK D/O DERICK GASBATH JOY |
| 21-OCT | BABY. ATHITHI SHAMMA D/0 CELIN JOSE |
| 22-OCT | MRS. SHEEBA DEVA PRAKASH |
| 23-OCT | MRS. BIBLIN CHRISTABEL |
| 23-OCT | BABY. B.N KARISS ANGELO D/O REV. S. PARANJOTHI BASKAR |
| 24-JAN | MR. JUSTIN OLIVER |
| 24-OCT | BABY. JEMIMAH D/O ASHOK KUMAR |
| 27-OCT | MR. JAYAN DHARMARAJ |
| 29-OCT | ABIGAIL CHRISTINE D/O PRAVEEN |
| 31-OCT | MSTR. EION JAYDEN S/O JASON |

## HAPPY ANNIVERSARY

| | |
|---|---|
| 05-OCT | RAVINDRA / SUNITHA RAVINDRA |
| 11-OCT | DANIEL DURAI SINGH / PAMELA RACHEL DANIEL |
| 21-OCT | PRABU DINESH KUMAR / REBECCA |




# How it Works







**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.




**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**